




விழுப்புரம் வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் டி.கே.பி ரமேஷ் அவர்களின் பெட்ரோல் பங்கை திறப்பு விழாவில் வனத்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கலந்து கொண்டு திறந்து வைத்தார். விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர், புதுச்சேரி மாநில எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், முன்னாள் மாவட்ட துணைச் செயலாளர் வழக்கறிஞர் அசோகன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர்.மாசிலாமணி, சேது நாதன், சீதாபதி சொக்கலிங்கம், மாவட்ட துணைச் செயலாளர் தயா இளந்திரையன், முன்னாள் அவைத் தலைவர் நமச்சிவாயம், தலைமைச் செயற்குழு சீனிராஜ், முன்னாள் நகரச் செயலாளர் கபிலன், திண்டிவனம் நகரமன்றத் தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், ஒன்றிய குழுத் தலைவர் சொக்கலிங்கம், ஒன்றிய துணை பெருந்தலைவர் ராஜாராம், முன்னாள் ஒன்றிய குழு தலைவர்கள் வசந்தா, மலர் மலர்மன்னன், நந்தகுமார், சதீஷ், பார்த்தீபன், சுதாகர், பரணிதரன், லதாசாரங்கபாணி, பாபு, அரும்புகுணசேகர், சின்னாராஜேந்திரன், வி.எஸ்.முருகன், பாலாஜி உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.



நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாற்றுத்திறனாளிகள் 36 பேருக்கு பெட்ரோல் ஸ்கூட்டரை பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வழங்கினார். உடன் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ் நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் என். கௌதமன், தாட்கோ தலைவர் உ.மதிவாணன், நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் ப. ஆகாஷ், நாகை நாடாளுமன்ற உறுப்பினர் வை. செல்வராஜ், கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் நாகைமாலை, மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் கார்த்திகேயன் மற்றும் பலர் உள்ளனர்.

# கடலூர் மாவட்டத்தில் ரூ.6.05 கோடி மதிப்பிலான திட்டப்பணிகள்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் திறந்து வைத்தார்!

கடலூர், டிச.30-

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார், தலைமையில் காட்டு மன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் ம.சிந்தனைசெல்வன் முன்னிலையில் குமராட்சி, காட்டு மன்னார்கோயில், ஸ்ரீமுஷ்ணம் மற்றும் கம்மாபுரம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட பகுதிகளில் ரூ.6.05 கோடி மதிப்பீட்டிலான முடிவுற்ற திட்டப் பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

நிகழ்ச்சியில் வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கிராமப்புற மக்களின் வளர்ச்சிக்காகவும் மேன்மைக்காகவும் ஏராளமான திட்டங்களை ஏற்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். நகர்புறங்களை போன்று ஊரகப் பகுதிகளும் அனைத்து வசதிகளையும் பெற்றிட வேண்டும் என்பதற்காகவும், அரசால் செயல்படும் திட்டங்களின் பயன்கள் கடைக்கோடி பகுதியில் வசிக்கின்ற தகுதியுள்ள அனைவருக்கும் கிடைத்திட வேண்டும் என்பதற்காக ஊரகப் பகுதிகளில் எண்ணற்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட உத்தரவிட்டுள்ளார்கள்.

பொதுமக்களின் சமூக பாதுகாப்பினை உறுதிசெய்திடும் விதமாக உணவு தேவைகளை பூர்த்தி செய்திடும் வகையில் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்படும் குடிமைப் பொருட்களை பொதுமக்கள் எளிதில் பெற்றிட வேண்டும் என்பதற்காக குடியிருப்பிற்கு அருகிலேயே புதிய மற்றும் பகுதிநேர நியாயவிலைக் கடைகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், உயர்தரமான கல்வியினை பாதுகாப்பான சூழலில் மனதிற்கினிய வகையிலும், அதிகமான மாணவர்கள் கல்வி கற்றிட வேண்டும் என்பதற்காகவும் பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடும் பொருட்டு புதிய மற்றும் கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் கட்டப்பட்டு மாணவர்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப் பட்டுள்ளது.

குமாராட்சி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட செட்டிக்கட்டளை பகுதியில் ரூ.9.16 இலட்சம் மதிப்பீட்டில் உணவு தானியக் கிடங்கு, ரூ.9.45 இலட்சம் மதிப்பீட்டில் நியாய விலைக்கடை, வக்காரமாரி பகுதியில் ரூ.14.31 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மையம், சாலியந்தோப்பு மற்றும் குண்டப்பாடி பகுதிகளில் தலா ரூ.9.45 இலட்சம் வீதம் ரூ.18.90 இலட்சம் மதிப்பீட்டில் மதிப்பீட்டில் உணவு தானியக் கிடங்கு திறந்து வைக்கப்பட்டது.

மேலும், காட்டுமன்னார்கோயில் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட செட்டித்தாங்கல் பகுதியில் ரூ.32.80 இலட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறைக் கட்டடம், செட்டித்தாங்கல், கீழக்கடம்பூர், தொரப்பு, முட்டம் ஆகிய ஊராட்சிகளில் தலா ரூ.42.65 இலட்சம் வீதம் ரூ.170.6 இலட்சம் மதிப்பீட்டில் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கிராம ஊராட்சி செயலகக் கட்டடம், மாமங்கலத்தில் ரூ.19.72 இலட்சம் மதிப்பீட்டில் கிராம ஊராட்சி செயலகக் கட்டடம் மற்றும் ரூ.12.40 இலட்சம் மதிப்பீட்டில் நியாய விலைக்கடை கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

தொடர்ந்து, ஸ்ரீமுஷ்ணம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சோழத்தரம் பகுதியில் ரூ.9.20 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மையம், களியங்குப்பம் பகுதியில் ரூ.12.00 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மையம், மதகளிர்மாணிக்கம் பகுதியில் ரூ.42.65 இலட்சம் மதிப்பீட்டில் கிராம ஊராட்சி செயலகக் கட்டடம், ரூ.14.00 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மையக் கட்டடம், ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் சித்தா ஆயுர்வேத மருத்துவமனை கட்டடம், கொக்கரசன்பேட்டை பகுதியில் ரூ.30.10 இலட்சம் மதிப்பீட்டில் கிராம ஊராட்சி செயலக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

மேலும், கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு தர்மநல்லூர் பகுதியில் ரூ.34 இலட்சம் மதிப்பீட்டில் உலர்கூடம், தர்மநல்லூர் பகுதியில் ரூ.42.65 இலட்சம் மதிப்பீட்டில் கிராம ஊராட்சி செயலகம், கோபாலபுரம் மற்றும் சாத்தப்பாடி பகுதிகளில் தலா ரூ.23.55 இலட்சம் வீதம் ரூ.47.10 இலட்சம் மதிப்பீட்டில் கிராம ஊராட்சி செயலகம், செப்லாநாதம் பகுதியில் ரூ.42.00 இலட்சம் மதிப்பீட்டில் கிராம ஊராட்சி செயலகம், வடக்கு மற்றும் தெற்கு செப்லாநாதம் பகுதியில் ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மையம், சாத்தமங்கலம் பகுதியில் ரூ.10.93 இலட்சம் மதிப்பீட்டில் அங்கன்வாடி மையம் ஆகிய கட்டடங்களை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்ற திட்டங்களை பயன்படுத்தி பொதுமக்கள் தங்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் என வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் இரா.சரண்யா சிதம்பரம் சார் ஆட்சியர் ரஷ்மி ராணி விருத்தாசலம் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) முருகன், உதவி செயற்பொறியாளர் ஊரக வளர்ச்சித் துறை வரதராஜபெருமாள், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### முட்டை ஏற்றுமதியாளர் சங்கத்தினருடன்

# கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. கத்தார் தூதரக அதிகாரியை சந்தித்து மனு!

நாமக்கல், டிச.30-

நாமக்கல்லில் இருந்து தினமும் சுமார் 60 லட்சம் முட்டைகள், கத்தார். ஓமன், துபாய், மாலத் தீவு போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகி றது. கத்தார் நாட்டு அரசாங்கம் கடந்த மாதம் முட்டை இறக்குமதியில் புதிய கொள்கையை ஏற்படுத்தியது. அதன்படி 60 கிராம் எடைக்கு மேல் உள்ள முட்டைகளை மட்டுமே இறக்குமதி செய்யப்படும் என அறிவித்தது.

நாமக்கல் மண்டலத்தில் 50 முதல் 55 கிராம் எடை உள்ள முட்டைகள் மட்டுமே அதிக அளவில் உற்பத்தி செய்யப்படுகிறது. இதனால் நாமக்கல்லில் இருந்து முட்டை ஏற்றுமதி பாதிக்கப்பட்டது.

இதுகுறித்து, நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமாரை சந்தித்து, கோழிப்பண்ணையாளர்கள் மற்றும் முட்டை ஏற்றுமதியாளர்கள் முறையிட்டனர். இதையடுத்து கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி, ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கரை, கடந்த வாரம் டெல்லியில் நேரில் சந்தித்து, கத்தார் நாட்டுக்கு நாமக்கல்லில் இருந்து முட்டை ஏற்றுமதி செய்ய தூதரகம் மூலம் நடவடிக்கை எடுக்கும் படி கோரிக்கை மனு அளித்தார்.

இதை தொடர்ந்து டில்லியில் உள்ள கத்தார் நாட்டின் தூதரகத்தில் நேற்று முன்தினம் பேச்சுவார்த்தை நடைபெற்றது. அப்போது. இந்தியாவுக்கான கத்தார் தூதர் அப்ராகனிம் அல்ஷலேவை கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி., நேரில் சந்தித்து முட்டை ஏற்றுமதிக்கு அனுமதி கோரி மனு அளித்தார். அப்போது, தமிழ்நாடு கோழிப் பண்ணையாளர்கள் சங்க தலைவர் சிங்கராஜ், முட்டை ஏற்றுமதியாளர்கள் சங்கத்தலைவர் பன்னீர் செல்வம், செயலாளர் ஜெகன், அகில இந்திய முட்டை ஏற்றுமதியாளர்கள் சங்க செயலாளர் வல்சன், வெங்கடாசலம், செந்தில் ஆகியோர் உடனிருந்தனர்.